**செய்தி வெளியீடு எண்–538** **நாள்–07. 07. 2008**

செய்திக் குறிப்பு

சென்னை கிண்டியில் அமைந்துள்ள காந்தி மண்டப வளாகத்தை மேம்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்று (7.7.2008) தமிழக அரசுக்கும் ஏர்செல் செல்லூலர் நிறுவனத்திற்கும் இடையே கையெழுத்தானது.

தன்னலமற்ற பணிகளால், மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்த தலைவர்களுக்கான பின்வரும் நினைவகங்களை காந்தி மண்டப வளாகம் தன்னகத்தே கொண்டுள்ளது:

மூதறிஞர் ராஜாஜி நினைவகம், அருங்காட்சியகம் மற்றும் நூலகம், அண்ணல் காந்தியடிகள் அருங்காட்சியகம் மற்றும் நூலகம், காந்தி மண்டபம், தியாகிகள் மணிமண்டபம், மொழிப்போர் தியாகிகள் மணிமண்டபம், பக்தவத்சலம் நினைவகம், ரெட்டைமலை சீனிவாசன் மணிமண்டபம், பெருந்தலைவர் காமராஜர் நினைவகம் மற்றும் கூட்ட அரங்கம்

சிறப்புமிக்க இந்த காந்தி மண்டப வளாகத்திலுள்ள காலியிடங்களை மேலும் சிறப்பாக மேம்படுத்தி பொதுமக்கள் பெருமளவில் வருகை புரியக்கூடிய இடமாக மாற்ற வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்கள். அதன்படி, பொதுப்பணித்துறையின் மேற்பார்வையில் காந்தி மண்டப வளாகத்தை தனியார் பங்களிப்புடன் மேம்படுத்தலாம் என தீர்மானிக்கப்பட்டது. இதற்காக பல்வேறு தனியார் துறைகளின் உதவி நாடப்பட்டது.

அதனையடுத்து மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் முடிவாக ஏர்செல் செல்லூலர் நிறுவனமானது சுமார் ரூ.78,00,000/– செலவில் காந்தி மண்டப வளாகத்தை மேம்படுத்த முன்வந்தது.

அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்று (7.7.2008) மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் தலைமையில் தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் தமிழக அரசுக்கும் ஏர்செல் செல்லூலர் நிறுவனத்திற்கும் இடையே கையெழுத்தானது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி ஏர்செல் செல்லூலர் நிறுவனமானது சுமார் ரூ.78,00,000/– செலவில் காந்தி மண்டப வளாகத்தை செய்தித்துறை மற்றும் பொதுப்பணித்துறை ஆகியவற்றின் மேற்பார்வையில் இயற்கை எழில் கொஞ்சும் வனப்புடன் பொது மக்கள் பயனுற மேம்படுத்தும்.

தற்போது காந்தி மண்டப வளாகத்தில் சில இடங்களில் வளர்ந்துள்ள புதர்கள், காட்டுச் செடிகள் போன்றவற்றை அகற்றிவிட்டு வளாகத்திலுள்ள காலியிடங்களில் அழகிய புல்வெளிகள், புல்வெளிகளைச் சுற்றிலும் 10 ஆயிரம் அடியில் பல்வகை வண்ணச் செடிகளால் ஆன வேலிகள், அழகிய பனை வகை மரங்கள், மலர்ச் செடிகள் ஆகியவற்றை ஏர்செல் நிறுவனம் அமைக்கும். மேலும் ஏற்கனவே உள்ள

நீருற்றுகளை அழகுற மாற்றியமைத்து நீருற்று அடியில் வண்ண விளக்குகளை அமைக்கவும் ஏர்செல் நிறுவனம் நடவடிக்கை எடுக்கவுள்ளது. முதலில் 3 ஆண்டு காலமும், அந்நிறுவனத்தின் பணிகளை ஆய்வு செய்த பின்னர் காந்தி மண்டப வளாகத்தை மேம்படுத்த மேலும் கால நீட்டிப்பும் அந்நிறுவனத்திற்கு வழங்கப்படும்.

தமிழக அரசின் சார்பில் தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறையின் முதன்மைச் செயலாளர் (பொறுப்பு) திரு.ம.குற்றாலிங்கம், இ.ஆ.ப.,அவர்களும், ஏர்செல் செல்லூலர் நிறுவனத்தின் சார்பாக அதன் தலைமைச் செயல் அலுவலர் திரு.ஐ.வீ.ஜே.பிரதீப் அவர்களும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்வின்போது, சமூக நலத்துறை மற்றும் பொதுப்பணித்துறை (பொறுப்பு) முதன்மைச் செயலாளர் திரு.நா.ச. பழனியப்பன், இ.ஆ.ப., அவர்கள், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநர் மற்றும் அலுவலால் அரசு கூடுதல் செயலாளர் முனைவர் ஆ.சி.மோகன்தாஸ், இ.ஆ.ப., அவர்கள், பொதுப்பணித்துறை அலுவலர்கள், தமிழக அரசின் இதர உயர் அலுவலர்களும் மற்றும் ஏர்செல் செல்லூலர் நிறுவனத்தின் செயல் இயக்குநர் திரு.கே.வி.ப.பாஸ்கரன் ஆகியோரும் உடனிருந்தனர்.

**வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**